தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை உத்திரவு

பிறப்பிப்பவர்: திரு. க.கண்ணன், M.A., B.Ed.,

ந.க.எண். 12521/2020/எம்சிஎப்1, நாள். .10.2025

பொருள்	மனைப்பிரிவு – தஞ்சாவூர் மாநகராட்சி – சர்வே வார்டு எண். 1, பிளாக் 41, நகரளவு எண். 1583/12- ல் 1806.00 ச.மீ குடியிருப்பு மனைப்பிரிவுக்கான இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.
பார்வை	1. தங்களின் தானப்பத்திர ஆவண எண். 654/2021, நாள்.02.03.2021 2. தஞ்சாவூர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 2422/2020/தமா3, நாள். 22.04.2021 3. மாமன்றத் தீர்மான எண். 81, நாள் 05.06.2025

****

உத்தரவு:

தஞ்சாவூர் மாநகரம், சர்வே சர்வே வார்டு எண். 1, பிளாக் 41, நகரளவு எண். 1583/12- ல் 1806.00ச.மீ பரப்பளவு இடத்தை குடியிருப்பு மனைப்பிரிவு செய்ய தங்களால் அனுமதி அளிக்க கோரப்பட்டதற்கிணங்க பார்வை (1) - ல் தங்களால் தானப்பத்திரம் அளிக்கப்பட்டதற்கிணங்க பார்வை (2) ல் கண்டுள்ள உதவி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப அனுமதி அளிக்கப்பட்டது.

மேற்படி மனைப்பிரிவில் கிழக்கு மேற்காக செல்லும் 2475 சதுரடி பரப்பளவு சாலை, இரண்டு மூலை முடுக்கு 25 சதுரடி பரப்பளவு இடம் பொது உபயோக இடம் 102 சதுரடி பரப்பளவு இம்மாநகராட்சிக்கும், தான பத்திர ஆவண எண்.654/2021 நாள் 02.03.2021ல் பொது உபயோக இடம் 119 சதுரடி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கும் தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. தங்களால் தார் சாலை சொந்த செலவில் செய்யப்பட்டுள்ளது என்றும், மின் கம்பம் அமைக்க உண்டான தொகை ரூ. 17,950/- மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு ரசீது எண்.TJRD 3637280 நாள் 07.07.2021ல் தொகை செலுத்தப்பட்டு மின் கம்பம் அமைக்கப்பட்டுள்ளது என்றும், இதர அடிப்படை வசதிகளான குடிநீர் பகிர்மான குழாய் பதிப்பு, பாதாள சாக்கடை கட்டமைப்பு, மழைநீர் வடிகால் அமைப்பு ஏற்படுத்துவதற்கு ரூ.4,00,000/- (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) மற்றும் பராமரிப்புத் தொகை ரூ.1,00,000 (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மனுதாரர் செலுத்தப்பட வேண்டும் எனவும் தெவிக்கப்பட்டதற்கிணங்க மனுதாரரால் பற்றுச்சீட்டு எண். 107/05/1/25-26/00029'27-ல் ரூ.4.00 இலட்சம் மற்றும் பற்று சீட்டு எண். 107/05/1/25-26/0002928 ல் ரூ.1.00 இலட்சம் ஆகியவைகள் செலுத்தப்பட்டுள்ளது.

இக்குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க பார்வை (3)ல் இம்மாமன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

எனவே பார்வை (2)ல் கண்டுள்ள உதவி இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்ட தொழில் நுட்ப அனுமதி மற்றும் நிபந்தனைகளின் படியும், பார்வை (3)ல் கண்டுள்ள மாமன்ற ஒப்புதல் படியும் மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவுக்கு இறுதி உத்தரவு வழங்கப்படுகிறது.

இணைப்பு : உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
தஞ்சாவூர் அவர்களின் தொழில் நுட்ப அனுமதி கடிதம்
மற்றும் மனைப்பிரிவு வரைபடம்.

ஒம்/- திரு.க.கண்ணன்,
ஆணையாளர்,
தஞ்சாவூர் மாநகராட்சி

// ஆணைப்படி அனுப்பப்பட்டது//

24/10/25

ஆணையாளருக்காக,
தஞ்சாவூர் மாநகராட்சி.

பெறுநர்:

திருமதி. ஆக்னஜ் ஜார்ஜ்,

C/o. Dr. ரஞ்ஜன் டேவிட்,

117/9 – 117/10, சிவாய நகர் 3வது கிராஸ்,

ரெட்டியூர், சேலம் – 636 004.

நகல் :

1. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தஞ்சாவூர்.
2. மாநகராட்சி உதவிப் பொறியாளர், , தஞ்சாவூர் மாநகராட்சி (சாலை பதிவேட்டில் பதிவு செய்ய ஏதுவாக)
3. நகரசார் ஆய்வாளர், தஞ்சாவூர் மாநகராட்சி. (நகரளவு ஆவணங்களில் உட்பிரிவு செய்ய ஏதுவாக)
4. உதவி வருவாய் அலுவலர், தஞ்சாவூர் மாநகராட்சி (காலிமனை வரி தொடர்ந்து வசூல் செய்திட ஏதுவாக)